# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்

| | |
|---|---|
| அ.வ.எண். 73/2015 | பி.வா.சா. 1 |
| பெயர் : வேலாயுதம் | த/பெ. ரத்தினம் |
| தாலுகா : நத்தம் | கிராமம் : நத்தம் கோவில்பட்டி |
| தேதி : 26.03.2025 | வயது : 71/2025 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் – 12.33 P.M. – 12.45 P.M.

**2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

43) நத்தம் கிராமம், சர்வே எண். 212/12 வாதி அறிவழகனுக்கு பாத்தியப்பட்டது என்றால் இல்லை. சர்வே எண். 212/12 தற்போது G.R.சர்வே எண். 531 ஆக மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. G.R.சர்வே எண். 531 ன்படி குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது சம்பந்தமாக தெரியாது. G.R.சர்வே எண். 531/36 இடம் பாதையாக உள்ளது என்றால் இல்லை. G.R.சர்வே எண். 531/36 ல் உள்ள பாதை வழியாகத்தான் G.R.சர்வே எண்.531/33 ல் உள்ள வீடுகளுக்கும், மற்ற வீடுகளுக்கும் செல்ல முடியும் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது.

44) சர்வே எண். 212/12 ல் பாதை உள்ளதா என்றால், உள்ளது. ஒரு நபர் நடந்து செல்லும் அளவிற்கு பாதை உள்ளது. அந்த பாதை கிழக்குப்பக்கம், தென்வடல் 4.8 மீட்டராக பாதை உள்ளது என்றால் சரியல்ல, எனது இடத்தை ஆக்கிரமிப்பு செய்து பாதையாக்கியுள்ளார்கள். இந்த பாதைக்கு தென்புறம் எனக்கு இடமும், வீடும் உள்ளது என்றால் சரிதான். அந்த வீடு G.R.சர்வே எண். 532/13 ல் உள்ளது என்றால் G.R.சர்வே எண் தெரியாது. எனது சர்வே எண். 212/15 ல் உள்ளது. என் வீட்டிற்கு கிழக்குபுறம் கடைகள் கட்டியுள்ளேன் என்றால் சரிதான். இந்த கடைகளை கட்டுவதற்கு இந்த வழக்கின் பாதையில் தென்புறம் சுமார் 5 அடி இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ளேன் என்றால்

சரியல்ல. நான் ஆககிரமிப்பு செய்து கட்டியுள்ள பாதை இடம் வாதியின் வீட்டிற்கு செல்லக்கூடிய பாதை என்றால் சரியல்ல.

45) வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இந்த வழக்கிற்கு சரியானவை அல்ல என்றால் சரியல்ல. வழக்கை 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 26.03.2025 கையெழுத்து செய்துள்ளார்.

M.Nallakannan., B.Com., B.L.,

Digitally signed by M.Nallakannan., B.Com., B.L., Date: 2025.03.26 17:16:59 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.